# மணலாறில் அகோர விமானத் தாக்குதல்

(முல்லைத்தீவு)
மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையிலான மோதல்கள் நேற்றும் தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது.

சிறிலங்கா அரசின் விமானப்படையும் சகல குண்டு வீச்சு விமானங்களும், பயணிகள் விமானங்களும் தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 31 இதழ்: 217
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 16-9-1991

## 7 படையினர் பலி

### 25 சிப்பாய்கள் காயம்

(முல்லைத்தீவு)
மணலாறு மாவட்டத்திலுள்ள நித்திகைக்குளம் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற கடும் மோதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 25 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஈமா)

## இலங்கை அகதிகள் நாடு திரும்ப விருப்பம்

(சென்னை)
இலங்கையில் அரசியல் அமைதியின்மை முடிவுக்கு வந்ததும், இலங்கை அகதிகள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்திருப்பதாகத் தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சர்

(4ம் பக்கம் பார்க்க)

# ★ ஜனாதிபதி திடீரென்று நாடாளுமன்றத்தைகலைத்தால் சட்ட நடவடிக்கை எடுப்போம்!

## லலித்-காமினி குழு அறிவிப்பு

(கொழும்பு)

**"நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா நடவடிக்கை எடுப்பாரேயானால் நாம் சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அதனை எதிர்த்துப் போராடுவோம்"**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட மூத்த உறுப்பினர்களான திரு. லலித் அத்துலத்முதலி, திரு காமினி திஸநாயக்கா ஆகியோர் நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதி மீதான கண்டனத் தீர்மானம் காலாவதியாகிவிட்டதுஎன்று ஜனாதிபதி பிரேமதாசா சபாநாயகருக்குக் கடிதம் எழுதியிருப்பது, மக்களைக் குழப்புவதற்கும், கண்டனத் தீர்மானம் நாடாளுமன்றத்திற்கு வராமல் தடுப்பதற்கும் அவர் எடுத்துள்ள கடைசி நேர முயற்சியாகும் என்றும் குறிப்பிட்டனர். (ஈ)

## தேர்தல் ஏற்பாடு யாவும் பூர்த்தி!

(கொழும்பு)
எந்தவேளையிலும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தயாராகவே இருப்பதாக மேற்படி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்பகுதியில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்பு காரணமாக

(4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சபாநாயகரின் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள முயற்சி!

### - சிறிமாவோ

(கொழும்பு)
சபாநாயகருடைய அதிகாரத்தையும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும் ஜனாதிபதி தமது கைகளில் எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதிக்கு உள்ள ஏகாதிபத்தியத்தையே இது எடுத்துக்காட்டுகிறது.

எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் மற்றும் நான்கு எதிர்க்கட்சித் தலைவர்களும் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருப்பது அவருடைய புதிய தந்திரோபாய முயற்சியை எடுத்துக் காட்டுவதாக தெரிகிறது என்றும் திருமதி சிறி

4ம் பக்கம் பார்க்க]

## சுவரொட்டிகள்!

(கொழும்பு)
ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான சுவரொட்டிகள் கொழும்பு நகரெங்கும் பரவலாகக் காணப்படுகின்றன.

திரு. பிரேமதாஸாவுக்கு எதிரான நான்கு குற்றச்சாட்டுக்கள் என்னும் தலைப்

[4ம் பக்கம் பார்க்க]

## கண்டனக் கூட்டம்

(கொழும்பு]
ஐ. தே. கட்சியிலிருந்து விலக்கப்பட்ட திரு. லலித், திரு. காமினி திசநாயக்கா குழுவினரின் அடுத்த கண்ட

[4ம் பக்கம் பார்க்க]

## அவசரகால சட்ட விவாதம்

(கொழும்பு)
நாடாளுமன்றம் எதிர்வரும் 25ம் திகதி கூடும்போது அவசரகால சட்டத் தீர்மானம் விவாதத்துக்குஎடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை அன்றைய தினம் வாக்கெடுப்புக்கு விடப்படும். அதன்பின் சபை பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்படவுள்ளது.

## பி. பி. ஸி.யின் கவலை

(லண்டன்)
இலங்கையின் தென்பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல்கொந்தளிப்பு குறித்து அமைச்சர்கள்அரசுதரப்புஎம் பிக்களின் கருத்தினைத் தெரிந்துகொள்வதற்காக பி. பி. ஸி பல முறை முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர்கள் அரசு தரப்பு எம் பிக்களுடன் தொடர்பு தனக்குக்கிடைக்காததை யிட்டு கவலை கொள்வதாகவும் பி பி. ஸி நேற்றிரவு தெரிவித்தது.

## இஸ்ரேலிடமிருந்து இலங்கைக்கு ராணுவ உதவிகள் கிடைத்தன!

(கொழும்பு)
இஸ்ரேலிடமிருந்து இராணுவ ரீதியிலான உதவிகள் இலங்கைக்கு கிடைத்ததை முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி ஒப்புக் கொண்டுள்ளார்.

தாம் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக பதவியேற்க முன்பே இவ்உதவிகள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்

இதேவேளையில் தமக்கோ தமது சகாக்களுக்கோ இஸ்ரேலிடமிருந்து எவ்வித நிதியுதவியும் கிடைக்கவில்லையென்றும்

(4ம் பக்கம்பார்க்க)

## இந்திய நாடாளுமன்றத்தை குண்டு வைத்து தகர்க்க சதி!

[புதுடில்லி]
இந்திய நாடாளுமன்றத்தை தகர்க்க சதி நடந்து வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

நாடாளுமன்றகட்டிடத்தை குண்டுவைத்து தகர்க்க தீவிரவாதிகள் சதி செய்ததாக 'டைம்ஸ் ஒவ் இந்தியா' தெரிவித்திருக்கிறது.

இதையிட்டு இந்திய நாடாளுமன்றக் கட்டிடத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அரசியல் நிலைமை மோசமடையும்!

(கொழும்பு)
ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை இல்லாமல் செய்யும் முகமாக நாடாளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தலை ஜனாதி

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### முதலாம்பிள்ளை

வானொலி நாடகம் எழுதிப் பழகவேண்டுமா? ஓரங்க நாடகமென்றால் என்ன? வாசியுங்கள். 175 வானொலி நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம் பிள்ளை 30/-. ஒரு கட்டுரையும்10 நாடகங்களும்கொண்ட நூல். (சி-5355)

### பயிற்சிகள்

ரெலிவிஷன், வீடியோ டெக், றிப்பியறிங், றிவைண்டிங், எலக்றிக்கல் வயறிங், ஏயர்கொண்டிசனிங், Quantity Surveying பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. ஆரம்பம் 21-09-91. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம். (ஏ-1579)

### விண்ணப்பப்படிவம்

(1) ஆசிரியர் கலாசாலை (2) சுகாதார அமைச்சு கவனிப்பாளர் பதவிக்கான அச்சிடப்பட்ட படிவம் விற்பனையாகிறது. நாயகப்பாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (சி-5357)

## மாட்டுவண்டி மூலம் உணவுப் பொருட்கள் எடுத்துவர அனுமதி

[யாழ்ப்பாணம்]

வவுனியா நகரிலிருந்து உணவுப் பொருட்களை மாட்டுவண்டி மூலம் வட பகுதிக்குள் கொண்டுவருவதற்கு இராணுவம் அனுமதியளித்துள்ளது.

வவுனியா நகரிலிருந்து உணவுப் பொருட்களை மாட்டுவண்டிமூலம் கொண்டுசெல்லலாம் என்றும், அப்படி கொண்டுவரப்படும் உணவுப் பொருட்கள் தாண்டிக்குளம் இராணுவ முகாமின் அதிகாரியின் வளவில் சோதனைசெய்த பின்பே கொண்டுசெல்வதற்கு அனுமதி அளிக்கப்படுமென்று வவுனியா இராணுவ கமாண்டர் தெரிவித்துள்ளார். [வி]

## பனம்பழம் 5 ரூபா

[கோகுவில்]

திருநெல்வேலி கொக்குவில் பகுதிகளில் பனம்பழம் ஒன்று ரூபா 5 முதல் 6 ரூபாவரை விற்பனையாகின்றது.

பனம் பழத்தில் உடைகளை சுத்தம்செய்ய இப்பகுதி மக்கள் நாட்டம் கொண்டதால் இக்கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## தியாகத் தீ-2

மூண்டது நெருப்பு...
அகிம்சையின் சிறப்பு...
ஆணிவேர் அறுபட,
இந்திய நாடு
விடுவதா?–இல்லை
திலீபனின் வழியிலே
விழுவதா?...

- வாஞ்சிநாதன்

## சித்திரப்பாட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை நுண்கலை மன்றத்தினரால் நடாத்தப்படும் சித்திரப்பாடப் பரீட்சைகள் இத்த வருடம் நவம்பர் மாதம் 9, 10ம் திகதிகளில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி செப்ரெம்பர் 24ம் திகதியாகும். இது பற்றி மேலும் தகவல் பெறவேண்டுமாயின் யாழ். கல்வித்திணைக்கள வட இலங்கைச் சங்கீதசபை காரியாலயத்தில் தொடர்புகொள்ளலாம். [152]

## முகாமைத்துவ பயிற்சி

[யாழ்ப்பாணம்]

உப-அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிநெறி நாளை 17ம் திகதி முதல் 21ம் திகதிவரை யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (152)

## அடையாள அட்டை கிடைக்கவில்லை

[மானிப்பாய்]

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம்வரை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரை அடையாள அட்டை அனுப்பிவைக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. [71]

## விசேட பயிற்சி

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால் மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடாத்தப்பட்ட விவசாயப் பயிற்சியில் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு பண்ணை முகாமைத்துவம் தொடர்பான விசேட பயிற்சியொன்று அண்மையில் ஆரம்பித்து செயற்படுத்தப்பட்டுவருகின்றது. [109]

## நோயாளர் தொகை அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இயங்கிவந்த தெல்லிப்பளை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு மூடப்பட்டுள்ளதால் அங்கு சென்று சிகிச்சைபெற்று வந்த வெளிநோயாளர்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால் வழமையைவிட யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது. [56]

## மக்கள் அஞ்சலி

[புலோலி]

மணலாறில் நடைபெற்ற நேரடிமோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட [கந்தையா தயாபரன்-கரவெட்டி] பிறேம்குமாரின் புகழுடம்பு வடமராட்சி பிரதேச மக்கள் முன்னணி அலுவலகத்திலும் நவிண்டில் தாமோதரம் வித்தியாலயத்திலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் வடமராட்சி மாவீரர் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. [61]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

கோட்டை நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### 2ம் லெப்ரினன் நிமலன்

[பாலசிங்கம் ஜெயவதனன்]

வீரஜனனம்: 12-03 1974

வீரமரணம்: 16-09-1990

''எம் கண்ணின் கருமணியே களங்கமிலா நிமலனே
எம் மகனே ஓடி வருவாய் என விழிபார்த்தோம்
கோட்டையிலே! தமிழ்ஈழக்கொடியேற்றப்படுப்பட்டாய்
கொடிய யுத்தமதில் களத்தில் வீரமரணமடைந்தாய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, அக்கா, அண்ணு,
சகோதர சகோதரிகள்.

தும்பளை,
பருத்தித்துறை.

(சி-5336)

## நல்லூரில் வேகநடை போட்டி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் தியாகி திலீபன் நினைவுதடகள விழாவின் மாவட்ட மட்டப் போட்டியான வேக நடைப்போட்டி நாளை 17ம் தேதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கான ஆரம்ப இடம் தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்த நல்லூர்க்கந்தன் ஆலய முன்றலாகும்.

ஆண்களுக்கான வேக நடைப் போட்டி காலை 6-00 மணிக்கும், பெண்களுக்கான வேக நடைப்போட்டி காலை 7-00 மணிக்கும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்கள் இப்போட்டியில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுக்கொள்வார்கள். போட்டியாளர்கள் குறித்த நேரத்திற்கு போட்டி ஆரம்பமாகும் இடத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## விவசாய கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி விவசாய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் கடந்த 14 ஆம் திகதி ''இன்றைய காலகட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் அவைக்கான தீர்வுகளும்'' என்னும் தலைப்பில் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.

கழகத் தலைவர் திரு. செ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக கைதடி கமநலசேவைவிவசாய போதனாசிரியர் திரு சி துரைராசா, நாவற்குழி - மேற்கு கிராம சேவை அலுவலர் திரு ஆ. நடராசா, திரு பொ. சுப்பையா, சிற்றூரவைத் தலைவர் திரு. இ. தில்லைநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். கழக உபதலைவர் திரு நா. கந்தசாமி நன்றி தெரிவித்தார்.

## இராசி பலன்

16 - 09 - 1991
திங்கட்கிழமை
தமிழுக்கு ஆவணி 31

அட்டமி மாலை 6-19 வரை. கேட்டை மு. ப. 8-04 வரை. இராகுகாலம் 7-33 முதல் 9-03 வரை, சுபநேரம் பகல் 12-03 முதல் 1-33 வரை. ஆவணிமூலம், சித்தயோகம்.

மேடம்: அறிஞர் விரோதம், தொழில் பாதிப்பு, அமைதி குன்றல்.

இடபம்: அயலவர் விரோதம், வாக்குப் பகை, குடும்ப சஞ்சலம்.

மிதுனம்: முக்கியான சந்திப்பு, பண வரவு, மனைவியால் பெருமை.

கடகம்: தாய்வழி உறவினர் வருகை, வஸ்திர லாபம், பெருமை.

சிங்கம்: அடிமை நிலை, காரிய விக்கினம், பயண அலைச்சல்.

கன்னி: புத்திரர் துன்பம், விரோத உணர்வு, மயக்கநிலை.

துலாம்: வெகுஜன மதிப்பு காரிய சித்தி, புதிய உறவு.

விருச்சிகம்: தவறானபோக்கு, கருத்துவேறுபாடு, குடும்பப் பிரிவு.

தனுசு; புதியசெய்தி, குடும்ப மகிழ்சசி, பிரச்னைக்குத் தீர்வு.

மகரம்: வேண்டாதசதொல்லை அலைச்சல் மிகுதி, வைத்தியச் செலவு.

கும்பம்: சுபகாரிய செலவு, தொழில் லாபம், விருந்து வைபவம்.

மீனம்: தொழில் முயற்சி, வாகனச்சுகம், புதியஸ்தானம்.

ஜோஸ்யர்

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### வீரவேங்கை அருண்

[கோவிந்தசாமி அருளானந்தம்]

[மாதகல் மேற்கு]

வீரஜனனம்: 08-01-1969

வீரமரணம்: 03-08-1991

எங்கள் அன்புத்தோழா - அருண்
அந்நியனை அழித்து அடிமை விலங்கு உடைத்து
மண்ணினை மீட்டு தமிழினம் காத்திட
அரும்பிலே குருதியால் அணைந்து விட்ட வீரனே
நாட்கள் பல சென்றாலும் ஆறாது உம்நினைவு
மீண்டும் வா தமிழ் மண்ணில்
சுதந்திரமாய் தவழ்வதற்கு.

நிர்வாகிகளும்
அங்கத்தவர்களும்.

பாரதி சனசமூக நிலையம்,
மாதகல் மேற்கு.

(சி-5346)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நெஞ்சம் மறவாத நித்திய ஒளி



தோற்றம்: 08-04-1906

• • •

மறைவு: 28-08-1990

### அமரர் நாகநாதர் தம்பு

(நயினாதீவு)

எங்கள் அன்புத்தந்தையே!
எம்மையெல்லாம் அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் வாழவைத்த தந்தையே!
எங்கள் இதயத்தில் என்றும்
தங்கள் இன்முகம் நீங்காது நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை என்றும் வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள்.

த. சோமசுந்தரம்
5-ம் வட்டாரம்,
நயினாதீவு.

[சி 5340]

## சந்திரசேகரனை ஆஜர் செய்யக் கோரி ஆட்கொணர்வு மனு தாக்கல்; இம்மாதம் 27-ல் விசாரணை

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி அவரது மனைவி தாக்கல்செய்த ஆட்கொணர்வு மனுமீதான விசாரணை இம்மாதம் 27-ம் திகதி நடைபெறவுள்ளது.

திருமதி சாந்தி சந்திரசேகரன் தாக்கல்செய்த ஆட்கொணர்வு மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் விஜயதுங்க, அமீர் இஸ்மாயில் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இம்மாதம் 27-ம் திகதிவரை பிரதிவாதிகளுக்கு பதில் தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி அனுசரணையுடன்ஆஜரான சட்டத்தரணி மோதிலால் நேரு, மனுவில் கோரப்பட்டுள்ளவர் அரசியல் கட்சி மற்றும் தொழிற்சங்கத் தலைவர் என்றும் 3-7-91 இல் தலவாகலெகொல்லையில் வைத்து கைதான இவரை மகசின் சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு உத்தரவிடுவதுடன் உறவினர்களும், சட்டத்தரணிகளும் அவரைச் சந்திப்பதற்கு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பிரதிவாதிகளான பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரதமர் டி. பி. விஜயதுங்க, குற்றப்புலனாய்வுத்துறை இயக்குநர் கொட்பிரே குணசேகரா, சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் வழக்கு ஆவணங்கள் சில தினங்களுக்குமுன்னரே தமக்கு கிடைத்தது என்றும் போதிய அறிவுறுத்தல்கள் பொலிசாரிடமிருந்து தமக்கு கிடைக்கவில்லை என்றும் பதில தாக்கல் செய்ய அவகாசம் தரும்படியும் கேட்டுக்கொண்டார். [137]

## புங்குடுதீவில் ப.நோ.கூ. சங்கம் குடிநீர்விநியோகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் பணியில் புங்.-நயி. பல நோ. கூ. சங்கம் ஈடுபட்டுள்ளது. வேலணை சாட்டி பகுதிக்குச் சென்று உழவு இயந்திரங்கள் மூலமாக குடிநீரை கொண்டு வந்து சங்கம் அம்மக்களுக்கு விநியோகித்துவருகிறது. (101

## திலீபன் நினைவுதினம்: உதைபந்தாட்ட போட்டி நடாத்த ஏற்பாடு

(புங்குடுதீவு)

தியாகி திலீபனின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தீவுப் பகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் திலீபன் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியொன்று புங்குடுதீவில் நடைபெறவுள்ளது. மேற்படி நடைபெறவிருக்கின்ற உதைபந்தாட்ட போட்டிகளில் சிறப்பாக பங்குபெறுவதற்கு தீவகத்திலுள்ள அனைத்து கழகங்களும் முன்வந்துள்ளன என்று தீவுப்பகுதி கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் சேரலாதன் தெரிவித்துள்ளனர். (101)

## யாழ். சுகாதாரத் திணைக்கள பிரச்னைகள் பற்றி ஆராயப்பட்டது

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகள்பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று யாழ் பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் யாழ். மாவட்ட மருந்துக்களஞ்சிய கட்டிடத்தில் நடைபெற்றது.

அரசாங்க வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் திணைக்கள நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் மருந்து விநியோகம், ஊழியர் பற்றாக்குறை, 6 மாதச் சம்பள முற்பணம் வழங்கல், ஊக்குவிப்பு கஷ்ட நிவாரண நிதி வழங்கல், மண்ணெண்ணெய் மற்றும் வைத்தியசாலைக்கு தேவையான எரிபொருள் வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டது. [72]

## தரிசு நிலங்களாகவுள்ள வயல் நிலங்களிலும் பயிர் செய்ய வேண்டும்!

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை கிராம சேவை அலுவலர் பிரிவுக்குட்பட்ட தரிசு நிலங்களாக கிடக்கும் சகல வயல் நிலங்களும் எதிர்வரும் பெரும்போகத்தில் செய்கைபண்ணப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டமொன்று ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் ஆனைக்கோட்டை கிராமசேவை அலுவலர் திரு. க. சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் உடுவில் சமநல சேவை விரிவாக்க உத்தியோகத்தர் திருமதி எஸ். பத்மநாதன் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த எஸ். அப்புத்துரை, கிராமிய உற்பத்திக் குழுத் தலைவர் எஸ். அம்பிகைபாகன் ஆகியோர் கலந்து கொண்டனர். [71]

## வணிக தின விழா நடத்த ஏற்பாடு

(உடுவில்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் வர்த்தக ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து இம்மாதம் 27ம் திகதி வணிகதின விழா நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விழாவுக்கு முன்பதாக வணிக மாணவர்களிடையே குறுவினா-விடை, கட்டுரைப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலைகளில் தெரிவு செய்யப்படும் ஐந்து மாணவர்கள் கோட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள கட்டுரைப் போட்டியில் பங்குபற்ற முடியும். போட்டிகள் அக்டோபர் 12ம் திகதி நடைபெறும்.

இவ்விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் வணிகவியல் கல்வியதிகாரி திரு. எஸ். இவராசா மேற்கொண்டுள்ளார். (109)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்த ஞானபரம்பரைச் சந்தானகுரவர் மறைஞானசம்பந்த சிவாச்சாரியார் நினைவுப் பேருரை யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெற்றது.

பண்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் இப் பேருரையை நிகழ்த்தினார். [152]

## தராசு படிகளுக்கு சீல் வைக்கப்படும்

(மானிப்பாய்)

யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தினால் இன்று முதல் 20-ஆம் திகதி வரை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து தராசு படிகளுக்குச் சீல் வைத்துக் கொடுக்கப்படுமென அறிவித்துள்ளனர். (71)

## மீண்டும் இடம் பெயர்வு

(ஊர்காவற்றுறை)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ். கொட்டடி, நாவாந்துறை, யாழ். ரயில் நிலையக் கட்டிடம் ஆகியவற்றில் அகதிகளாக இருந்தவர்கள் அனைவரும் தற்போது நாவற்குழி அகதி முகாமுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். [59]

## ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைக்கு பயறு, கௌபி, கடலை போன்ற சத்துமிக்க உணவுப் பொருள்களுக்குப் பதிலாக கூட்டுறவுச் சங்கக் கடைகளில் "ஹைலண்ட்" பால்மா பைக்கற் வழங்கப்பட்டதற்கு மாதகல் நுணசை வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. [72]

## யாழ். இந்துவின் 75-வது சாரணர் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு எழுபத்தைந்தாவது வருட விழா அக்டோபர் 24ம் திகதி அன்று நிறைவெய்துகின்றது. கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் 75 ஆண்டுகள் பூர்த்தியடைந்த சாரணிய இயக்கத்தை கௌரவிக்கும்முகமாக இவ்வாண்டு மூன்றும் தவணையை சாரணர் தவணையாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

1916ம் ஆண்டு செப்டம்பர் மாதகாலப் பகுதியில் திரு. மெண்டிஸ் என்பவர் காலி றிச்மெண்ட் கல்லூரியிலிருந்து யாழ் பிரதேசத்திற்கு வந்து யாழ் பரியோவான்கல்லூரியில் சாரணிய இயக்க ஆரம்ப விழாவை நடாத்தினார். அவ்வைபவத்தில் யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி, யாழ். சம்பத்திரிசியார்கல்லூரி ஆகியகல்லூரிகளில்சாரணியம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஐந்து கல்லூரிகளிலும் 121 சாரணர்கள் உலக சாரணியத்தின் அங்கத்தவராயினர். 1916 அக்டோபர் 24ம் திகதி அன்று எவ் ஜீ. ஸ்ரீபன் என்பவர் இலங்கை சாரணிய அமைப்பில் மேற்கூறப்பட்ட பாடசாலைகளைப் பதிவுசெய்து கொண்டார்.

4-வது யாழ்ப்பாணம் என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தற்போது குருளைச் சாரணர் (40), சாரணர் (41), கடற்சாரணர் (22) திரிசாரணர் (6) ஆகிய பிரிவுகளைக் கொண்ட பெரிய அமைப்பாக வடபகுதியில் திகழ்கின்றது

நாட்டுச் சூழ்நிலை காரணமாக கோலாகலமாக விழா எடுப்பதனைத் தவிர்த்து நூற்றாண்டு விழா அனுஷ்டித்தது போலவே சாரணிய விதிகளுக்கு அமைய பவள விழாவினை அனுஷ்டிக்க சாரணர் குழுத்தலைவரும் சாரண ஆசிரியர்களும் ஒழுங்கு செய்து வருகின்றனர்.

## உலக ஆசிரியர் தினம்

(உடுவில்)

இம்மாதம் 30ம் திகதியில் இருந்து அக்டோபர் ஆறும் திகதி வரை நடைபெறவிருக்கும் உலக ஆசிரியர் தினத்தை சிறப்பாகக் கொண்டாட மருதனார்மடம் கல்விக் கோட்டத்தினர் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

இக்காலக் கொண்டாட்டங்களுக்கு முன்னோடியாகப் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள், இயல், இசை, நாடகப் போட்டிகளை நடாத்துமாறும் கோட்ட மட்டத்திலான போட்டிகளை இம்மாதம் 28, 29, 30ம் திகதிகளில் நடாத்துமாறும் மருதனார்மடம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. தனஞ்செயன் அறிவித்துள்ளார். (109)

## படிவங்கள் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

தேசிய அடையாள அட்டை புதுப்பித்தலுக்கான விண்ணப்பப்படிவங்களுக்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தட்டுப்பாடு நிலவுகின்றது. (72)

## இலவசம்

(யாழ்ப்பாணம்)

நீற்றுப்பூசினிவிதைதேவைப்படுவோர் முத்திரை ஒட்டி சுயவிலாசமிட்ட தபால் உறை அனுப்பி இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்ப்பாணம் மில்க்வைற் அதிபர் தெரிவிக்கிறார்.

## மாமனிதர் கலைஞானியின் அரும்பொருட் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்றத்தின் ஆதரவில் மாமனிதர் கலைஞானியின் அரும்பொருட்கண்காட்சி இம்மாதம் 27ம் தேதி வெள்ளிக்கிழமை தொடக்கம் அக்டோபர் 6ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்நிலையமண்டபத்தில் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை இக்கண்காட்சி நடைபெறும். 27ம் தேதி காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ் பல்கலைக்கழகநூலகர் திரு சி. முருகவேள் ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைப்பார்கள். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கண்காட்சியைத் தொடக்கி வைப்பார்.

## ஊழியர்கள் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் மத்தியிலிருந்து குடும்பநல சேவையாளர்களை தெரிவு செய்வது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு தாமதமாக கிடைத்ததால் பலர் அதற்கு விண்ணப்பிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கை இங்கு கடந்தவாரம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

கடந்த மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் இதற்கான விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (72)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கவுள்ள 'தமிழீழ நாடகக் கல்லூரி' சம்பந்தமான கலந்துரையாடல் இம்மாதம் 18ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

## கசிப்பு உற்பத்தி இருவர் கைது

(அச்சுவேலி)

கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட இருவர் 32 போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டனர்.

பனம் பொருள் அபிவிருத்திச் சங்க விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களினால் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து கைதான இருவரும் வட்டவைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## நெடுந்தீவுப் பகுதியில் நோயாளருக்கென புதிய அம்புலன்ஸ் மோட்டார் படகு!

[வேலணை]

நெடுந்தீவுப்பகுதியில் உள்ள நோயாளர்களை ஏற்றி இறக்குவதற்கென 40 லட்சம் ரூபா செலவில் புதிய அம்புலன்ஸ் மோட்டார் படகொன்று சேவைக்கு அமர்த்தப்படவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் இப்படகு சேவைச் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற வருடம் இந்த அம்புலன்ஸ் படகுக்கென 17 1/2 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இப்படகை கட்டுவதற்கென கொடுக்கப்பட்ட ஒப்பந்த காலத்தில் படகை அமைக்கமுடியாது போய்விட்டது

தற்போது இந்த அம்புலன்ஸ் படகை கொழும்பில் கட்டுவதற்கான ஏற்பாடுகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டிருப்பதால் அடுத்த ஆறு மாத காலத்திற்குள் இப்படகுச்சேவை ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (75)

## தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை தீவிரமாகும்

(சென்னை)

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை செயலாக்கம் தீவிரப்படுத்தப்படும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உறுதி எடுத்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற முன்னாள் முதலமைச்சர் அண்ணாதுரையின் பிறந்த நாள் விழாவில் மேற்படி உறுதிமொழியைத் தெரிவித்தார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கட்டாய பாடங்களாக்கப்படும் என்று மேலும் அவர் தெரிவித்தார். (மா)

## வீர வணக்கம்

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் இம்மாதம் 14-ந் திகதியன்று வீர மரணத்தைத் தழுவிக்கொண்ட அலிபா (மாமுடி கிருஷ்ணகுமார், ஆண்டான்குளம், மன்னார்), யுனைதா (வசந்தி தங்கராசா, மட்டக்களப்பு) நியாஸ் (இராமநாதன் ஜெயானந்தராசா, காரைநகர்), சுதா (ரஜனி பாலேந்திரன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு.) யூட்டி (ஜெயதேவி இராசரட்ணம், உடுத்துறை) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்

★ ★ ★

மாவிட்டபுரம் பகுதியில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் லெப். குலன் (சபாபதி பார்த்திபன், கோண்டாவில்) என்ற வேங்கை வீர மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## அண்ணா பிறந்தநாள்

(சென்னை)

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் அமரர் சி என். அண்ணாத்துரையின் 83வது பிறந்த நாள் விழா நேற்று தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று அமரர் அண்ணாத்துரையின் பாரியார் திருமதி ராணி அண்ணாத்துரையிடம் 5 லட்சம் ரூபா பணமுடிப்பை வழங்கினார். (மா)

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

'தமிழீழ நோக்கு' ஆய்வு சஞ்சிகையின் வெளியீட்டுவிழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவிருக்கிறது.

பேராசிரியர் வி. ஆறுமுகம் தலைமையில் இவ்விழா இடம் பெறவிருக்கிறது

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா, துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா, பேராசிரியர் என் பாலகிருஷ்ணன், கலாநிதி இ. பாலசுந்தரம், திரு. அ. திருநாவுக்கரசு, திரு இ. இரத்தினம் ஆகியோர் இவ்விழாவில் உரையாற்றவிருக்கின்றார்கள். (மா)

## ஊக்குவிப்பு சலுகைகள் இடைநிறுத்தம்

(அச்சுவேலி)

உலர் உணவு உற்பத்தி அபிவிருத்திக்கான ஊக்குவிப்பு சலுகைகள் கடன் வசதிகள உத்தியோகத்தர்களுக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

உணவு விநியோக அட்டையில் "உ" பச்சை நிற அட்டை உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு உற்பத்தி தொடர்பான சலுகைகள் கடன் வசதிகள் தொடர்ந்து வழங்கப்படாது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## அரச ஊழியருக்கு நிவாரணம்

[கொழும்பு]

சிங்கள மொழித் தேர்ச்சி சட்டத்தினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கவும், அரச உள்ளூராட்சி, கூட்டுத்தாபன துறைகளில் உள்ள அமைய தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கவும் பொதுநிர்வாக மாகாண சபைகள் அமைச்சு சுற்றறிக்கைஒன்றை விடுத்துள்ளது

தற்போது பதவியிலிருக்கும் பதவியுயர்வு மறுக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான சகல தடைகளும்- 6-6-91 தொடக்கம் இதன் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

## தலைமை அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பானில் இயங்கி வந்த ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்க தலைமை அலுவலகம் ஸ்ரான்லி வீதியிலுள்ள பி. எஸ். சேவிஸ் ஸ்ரேசன் மேல் மாடியில் 15-09-91 தொடக்கம் இயங்கி வருகின்றது.

உலர்உணவு விநியோகம் 'அ' 'உ' கட்டங்கள் மானிப்பாய் வீதியில் விநியோகம் தொடர்ந்து நடைபெறுகின்றது 'இ' அட்டைகளுக்கான விநியோகம் இன்று 16ந் திகதி தொடக்கம் கஸ்தூரியார் வீதியில் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க எல்லைக்குட்பட்ட ஓய்வூதியக்காரருக்கு ஆடி மாத ஓய்வூதியம் தலைமை அலுவலகத்தில் வழங்கப்படுகிறது.

## சுவரொட்டிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் காணப்படும் இந்தச் சுவரொட்டிகள் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளன.

ஐ. தே. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர் குழு இச் சுவரொட்டிகளுக்கு பின்னணியில் உள்ளதாக பரவலாக கருத்து தெரிவிக்கப்படுகிறது. [க]

## திருட்டில் ஈடுபட்டவர் பிடிபட்டார்

(நாவற்குழி)

பல இடங்களில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டு வந்த ஒருவர் கைதடியில் சைக்கிள் திருட்டில் ஈடுபடும்போது கைதடிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு சங்கரினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

புத்தூர் வாதரவத்தையை சேர்ந்த சந்தேகநபர் ஏற்கனவே சுமார் 20ற்கும் மேற்பட்ட சைக்கிள் திருட்டில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்துள்ளது. (107)

## தேர்தல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் எந்த நேரத்திலும்கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்ற நிலை ஏற்பட்டிருப்பதை அடுத்தே தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தேர்தலை எதிர்கொள்வதற்குச் சகல ஏற்பாடுகளையும் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மணலாறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் குடியிருப்புகள் மீதும் காடுகள் மீது இடைவிடாது தாக்குதல்கள் நடாத்தி வருகிறது இக்குண்டு வீச்சு தாக்குதல்களினால் தமிழ் மக்களின் உடமைகள் பெருமளவில் நாசமடைந்துள்ளன. உடமைகளை இழந்த தமிழ் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் சிலபகுதிகளிலுள்ள குடியிருப்புகள் குண்டு தாக்குதல்களினால் நாசமாக்கப்பட்டுள்ளன. 20 ஆயிரம் வயல் நிலங்களும் அழிக்கப்பட்டுள்ளன. (மா)

## சட்டமா அதிபரை சந்திக்க லலித் ஏற்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து நீக்கப்பட்ட திரு. அத்துலத்முதலியும் ஏனைய 7 பேரும் சட்டமா அதிபரைச் சந்திக்கவுள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை காலாவதியாகிவிட்டதென சட்டமா அதிபர் அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த அதிருப்தியாளர் குழு சட்டமா அதிபரை சந்தித்து உரையாடவுள்ளது.

## வெளிநாடு செல்லவேண்டாமென எம். பி.க்களுக்கு வேண்டுகோள்!

(கொழும்பு)

அடுத்த சில வாரங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என அரசாங்கம் கேட்டுள்ளது.

ஐ. தே. கட்சியின் நாடாமன்றக்கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை கூடவிருப்பதையொட்டியே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [க]

## நாடாளுமன்றஉறுப்பினரை நியமிக்க முயற்சி

(கொழும்பு)

தேசியப்பட்டியலில்நாடாளுமன்ற உறுப்பினரை நியமிக்க ஐக்கிய சோசலிச முன்னணி முயற்சி எடுத்து வருகிறது. நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கும் ஐக்கிய சோசலிச முன்னணி தேசிய பட்டியல் ஆசனத்தை நிரப்ப இப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றக் குழு 18ம் திகதி கூடுகிறது

(கொழும்பு]

அரச நாடாளுமன்றக்குழு, மீண்டும் எதிர்வரும் 18 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் கூடவுள்ளது.

அதிருப்தியாளர்களுடன் மேலும் எம்பிக்கள் இணைந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவே இப்படி அவசர அவசரமாக அரச நாடாளுமன்றக்குழு கூட்டப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும்

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்னையை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும்.

இலங்கை கிராமியதொழிற்றுறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் சென்னையில் நேற்று பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதி பிரேமதாசா நடாத்தினால் நாட்டில் அரசியல் நிலைமை மேலும் மோசமடையுமென்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் இந்த அவதானிகள் தெரிவித்துள்ளனர். (153)

## ஜனாதிபதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

முப்படைத்தளபதிகளும் சிவில் நிர்வாக அதிகாரிகளும் அரசியலமைப்புக்கு அமைவாக நடக்குமாறும் சட்டத்துக்கு புறம்பாக ஜனாதிபதி வழங்கும் பணிப்புரைகளுக்கு இணங்கி நடக்க வேண்டாமென்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் அறிக்கை மூலம் கேட்டுள்ளார்கள்.

இதேவேளை இதுபற்றி திரு. காமினி திஸநாயக்கா தெரிவிக்கையில்; இந்தப் பிரேரணையைத் தடுப்பதன் மூலம் ஜனாதிபதி தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார் என்றார்.

தமக்கு எதிரான பிரேரணையை நாடாளுமன்றம் கொண்டு வருவதை ஜனாதிபதி தடை செய்தால் அவர் மீதான குற்றச்சாட்டுகளை மக்கள் முன் அம்பலப்படுத்துவோம். பொதுசன தொடர்பு சாதனங்களை ஜனாதிபதி தமது சொந்த சொத்துக்களாகவே பாவித்து வருகிறார் என முன்னாள் ராஜாங்க தொழிலமைச்சர் திரு. லக்ஷ்மன் செனிவிரத்ன தெரிவித்துள்ளார். (153)

## இஸ்ரேலிடமிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்மீது ஜனாதிபதி அபாண்டமான பழி சுமத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## கண்டனக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னக்கூட்டம் வெகுவிரைவில் குருநாகலில் நடைபெறவிருக்கிறது.

இதேவேளையில் எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டம் எதிர்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் கம்பஹா, ரத்னபுரி ஆகிய இடங்களில் நடைபெற்றது. இன்று மாத்தளையில்மாபெரும் கூட்டம் நடைபெறவிருக்கிறது. [153]

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

மதுரையில் அகதிகள் தங்கியுள்ள முகாம்களைச் சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் பத்திரிகையாளர்களுக்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த விடயத்தைத் தாம் தமிழ்நாடு முதலமைச்சரிடம் எடுத்துக் கூறியதாகவும், இவ்விடயம் தொடர்பாகக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்வதற்கு முதல்வர் மத்திய அரசுடன் ஆலோசனை நடத்தவுள்ளார் எனவும் கூறினார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81.